ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2116/31 - 2019 මාර්තු මස 27 වැනි බදාදා - 2019.03.27

*2116/31 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச்சட்டம்**

*93(4) ஆவது பிரிவின் கீழான அறிவித்தல்*

*2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 93 ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், பதில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அசோக்க நதுன் குருகே ஆகிய நான், இக்கட்டளை மூலம், அப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டதும் 2018, ஏப்பிறல் 1 ஆந் திகதியுடைய 2064/59 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட கட்டளையின் 2 ஆம் விடயத்தை பின்வருமாறு திருத்தம் செய்கின்றேன்.*

ஏ. என். குருகே,<br>
பதில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,<br>
கொழும்பு 02,<br>
*2019, மாச்சு 27.*

**அட்டவணை**

*1.* அந்த அட்டவணையில் *2* ஆம் விடயம் அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விடயம் உட்சேர்க்கப்படுவதன் மூலம் :-

"*2.* (I) ரூபா 50,000 இனை விஞ்சுகின்ற முதலீட்டுச் சொத்தின் தேறிய பெறுகையிலிருந்து வதிவுள்ள தனியாளொருவரினால் மேற்கொள்ளப்படுகின்ற ஈட்டுகையானது ரூபா 50,000 இனை விஞ்சுமிடத்து, மூலதன ஈட்ட வரி விபரத்திரட்டானது முதலீட்டுச் சொத்தின் தேறிய பெறுகைத் திகதியின் பின்னரான ஒரு மாத காலத்திற்குப் பிந்தாமல் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(II) *அத்தகைய வரி விபரத் திரட்டுக்கள், வதிவுள்ள தனி ஆளொருவரினால் தேறிய பெறுகையிலிருந்தான ஈட்டுகை ரூபா 50,000 இனை விஞ்சாமலும், வரிமதிப்பீட்டாண்டினுள் வதிவுள்ள தனியாளொருவரினால் தேறிய பெறுகையிலிருந்தான மொத்த ஈட்டுத்தொகை ரூபா 6,00,000 இனை விஞ்சும்போது, மொத்த ஈட்டுகை ரூபா 6,00,000 இனை விஞ்சும் கிட்டிய தேறிய பெறுகையின் திகதியின் பின்னரான ஒரு மாத காலத்திற்குப் பிந்தாமல் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.*"

*04-347*